செய்தி வெளியீடு எண்: 211 நாள்: 05.03.2019

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.3.2019) தலைமைச் செயலகத்தில், இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், மாரியூர் கிராமத்தில் டைடல் பார்க் நிறுவனத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள 10 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் ஆக்கபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் உள்ள வாலிநோக்கம் உப்பள வளாகத்தில் 50 மெகாவாட் மின் திறன் கொண்ட சூரிய வெப்ப சலன மின் உற்பத்தியுடன் கூடிய 15 mld கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டம் தொடங்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 24.7.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, இத்திட்டத்தின் முதற்கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், மாரியூர் கிராமத்தில் டைடல் பார்க் நிறுவனத்தின் மூலம் நிறுவப்பட்டுள்ள 10 மெகாவாட் சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு சுமார் 1.89 கோடி மின் யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டு டைடல் பார்க் தன் சொந்த தேவைக்கு பயன்படுத்திக்கொள்ளும். மேலும், டைடல் நிறுவனம் தனது 50 சதவிகித மின் தேவையை மரபு சாரா எரிசக்தியான சூரிய ஒளி மின்சாரத்தின் மூலம் பூர்த்தி செய்து கொள்வதோடு, ஆண்டுக்கு சுமார் 10 கோடி ரூபாய் வருமானம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் அடுத்த கட்டங்களாக சூரிய வெப்ப சலனம் (Solar Thermal) மின் திட்டம் அமைத்தல் மற்றும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்த விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு. எம்.சி. சம்பத், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு நா. முருகானந்தம், இ.ஆ.ப., தொழில் துறை சிறப்புச் செயலாளர் திரு.வி.அருண் ராய், இ.ஆ.ப., டைடல் பார்க் மேலாண் இயக்குநர் திரு. பி. இளங்கோவன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**